# படிப்பு உதவிகள்




பவுலின் நாட்களில் இருந்த ரோம சாம்ராஜ்யம்

# அப்போஸ்தலனாகிய பவுல்

> *"இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்" (ரோமர் 1:1).*

> *"தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல்" (கொலோசெயர் 1:1).*

*பவுலின் பின்னணியில் கிரேக்க கலாச்சாரமும் ரோமக் குடியுரிமையும் (நடபடிகள் 16:37; 22:25), மற்றும் யூதமதமும் உட்பட்டிருந்தது (கலாத்தியர் 1:14). அவர் எபிரெயனும் பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவருமாவார் (பிலிப்பியர் 3:5), ஒரு பரிசேயரில் பிறந்த பரிசேயன் (நடபடிகள் 23:6). அவர் பிறப்பால் ரோமக் குடியுரிமை பெற்று அதன் அனைத்து உரிமைகளையும் சிலாக்கியங்களையும் பெற்றிருந்தார். அவர் ரோம மாகாணமான சிலிசியாவின் தரிசுப்பட்டணத்தைச் சேர்ந்தவர் (நடபடிகள் 21:39; 22:3), அது மத்தியதரைக் கடலின் மூலையிலிருந்த ஒரு மாவட்டம். தரிசுப் பட்டணம் ஒரு பிரசித்திபெற்ற பல்கலைக்கழகத்தைக் கொண்ட மையமாக இருந்தபடியால், அத்தனே மற்றும் அலெக்ஸாந்திரியா பட்டணங்கள் மட்டுமே கற்றலுக்கும் கலாச்சாரத்துக்குமான மிக உயர்ந்த பட்டணங்களாகக் கருதப்பட்டன. தரிசுப்பட்டணம் ஆட்டு மயிர் - ஆடைகளை உற்பத்தி செய்கிற, ஒரு வியாபார மையமாக இருந்தது. ஒரு வேளை இங்குதான் பவுல் தனது கூடாரத்தொழிலைக் கற்றுக் கொண்டிருக்கக் கூடும் (நடபடிகள் 18:3).*

*பிரசித்திபெற்றவரும், யூதருடைய நியாயப்பிரமாணத்தில் தேறினவரும், மிகப்பெரிய ரபீமார்களாகக் கருதப்பட்ட ஏழு ரபீமார்களில் ஒருவருமான கமாலியேல், பவுலின் மதப் போதகராக இருந்தவர் (நடபடிகள் 22:3). நம்பிக்கையளிக்கிற பரிசேய வாலிபனும் சபையைத் துன்பப்படுத்துவதில் முன்னோடியுமாயிருந்த பவுல் (நடபடிகள் 8:3), ஸ்தேவானை கல்லெறிய சம்மதித்திருந்தார், ஸ்தேவான் தான் கிறிஸ்தவத்திற்காக இரத்தம் சிந்தி மரித்த முதல் தியாகி (நடபடிகள் 7:58; 8:1, 2). அவர் சபைக்கு உச்சக்கட்ட எதிர்ப்பைத் தெரிவித்ததன் மூலம் அவரது வைராக்கியம் வெளிப்பட்டது, இதிலே வேறெந்த யூதமதத் தலைவர்களும் செய்திராத அளவுக்கு ஊக்கமாய் செயல்பட்டார்.*

*பவுல் அந்நிய பட்டணங்களுக்குப் பயணம் பண்ணி அங்கிருந்த கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும் அளவுக்குத் தன்னை அர்ப்பணித்திருந்தார் (நடபடிகள் 9:1, 2; 22:5; 26:11). அவருடைய மனசாட்சி அவரை ஆக்கினைக்குள்ளாக்கவில்லை (நடபடிகள் 23:1; 24:16; ரோமர் 9:1; 2 கொரிந்தியர் 1:12; 2 தீமோத்தேயு 1:3), ஏனெனில் அவருடைய மனதிற்கு சரியெனப் பட்டவைகளை அவர் செய்து கொண்டிருந்தார் (நடபடிகள் 26:9). தேவன் விலக்கியிருந்த வேறே தேவர்களை சேவித்தால் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்களை நியாயப்பிரமாணம் கோரியிருந்தபடியால், ஒருவேளை கிறிஸ்தவர்கள் சாக வேண்டும் என அவர்*

*வகைதேடியிருக்கலாம் (உபாகமம் 17:1-5). இயேசு அவருக்குத் தரிசனமாவதற்கு முன், இயேசுவை தெய்வீகம் நிறைந்தவராகவோ அல்லது தொழுகைக்குப் பாத்திரமானவரென்றோ அவர் (பவுல்) விசுவாசிக்கவில்லை.*

*எழுபது பேர் கொண்ட யூதர்களின் பெருமை மிக்க ஆலோசனை சங்கத்தில், பவுலும் ஒரு உறுப்பினராக இருந்தார் என சிலர் யூகிக்கிறார்கள். இப்படிப்பட்ட முடிவுக்கு வர முக்கியக் காரணம் கிறிஸ்தவர்களை உபத்திவப்படுத்துதலைக் குறித்து பவுல் கொடுத்த வாக்குமூலமான: "அவர்களுக்கு எதிராக என் சம்மத சீட்டைப் போட்டேன்" என்று சொன்னதினால்தான் (நடபடிகள் 26:10). இப்படிப்பட்ட அறிக்கையே அவர் சங்கத்தில் ஒரு உறுப்பினராக சம்மதம் தெரிவித்தார் (தனது வாக்குச்சீட்டைப் போட்டார்) என்பதாக சொல்லும் பேச்சுக்கு மதிப்பளிக்கிறது; ஆகிலும் இது முடிவான கருத்தல்ல.*

*ஆலோசனைச் சங்கத்தில் இருந்தவர்கள் வயது முதிர்ந்தவர்களும் ஆஸ்தியும் உயர்ந்த செல்வாக்குடையவர்களுமாய் இருந்தபடியால் எருசலேமில் நன்கு அறியப்பட்டத் தலைவர்களாய் இருந்தனர். அப்போஸ்தலர் 7:58 ல் பவுல் ஒரு "வாலிபன்" (neanias), என்றழைக்கப்பட்டுள்ளார், இந்தப்பதம் ஐத்திகு (நடபடிகள் 20:9) மற்றும் பவுலின் சகோதரியின் மகன் (நடபடிகள் 23:17, 18, 22) ஆகியோருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. யூதர்களின் நடுவே அவர் ஒரு கிறிஸ்தவனல்லாதவராக நின்று கொண்டு தன்னைக் குறிப்பிடும்போது கூட, தான் ஆலோசனைச் சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்று குறிப்பிடவில்லை (நடபடிகள் 22:3-5; 26:4, 5; கலாத்தியர் 1:13, 14; பிலிப்பியர் 3:4-6). அவரைக் குறித்த அனைத்துத் தகவல்களிலும், இது தான் அவரது கடந்த காலத்தில் யூதமதத்திற்குத் தன்னை அவர் அர்ப்பணித்திருந்ததும் யூதசமுதாயத்தில் அவர் நிலைக்கும் மிகவும் மன நெகிழ்வை ஏற்படுத்துவதாயிருந்திருக்கும்.*